திருத்தப்பட்ட 10-வது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

11-வது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மசோதாவின் நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் மசோதாவைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று கோருவார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது திருத்தப்பட்ட "பொது விற்பனை வரி மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திருத்தப்பட்ட மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமா என்பது கேள்வி. இதை ஆதரிப்பவர்கள் 'ஆம்' என்க. எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்க.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் அவர்கள் வாக்குகளை என்னி கணக்குப் பார்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் போலும். மணி அடித்தவுடன், கதவுகளை எல்லாம் மூடி எண்ணுதல் நடத்த வேண்டும். உறுப்பினர்கள் எல்லோரும் அருள் கூர்ந்து அவரவர்கள் இடத்திலேயே அமர வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டது—கதவுகள் எல்லாம் மூடப்பட்டன)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திருத்தப்பட்ட மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமா என்பதே கேள்வி. ஆதரிக்கிறவர்கள் 'ஆம்' என்க. எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்க.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு திருத்தப்பட்ட மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினரின் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

8. அரசினர் தீர்மானம்.

தமிழக மின்சாரக் கழகம் வாங்கக்கூடிய அதிகக் கடன் அளவை வரையறுத்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1948-ம் ஆண்டு மின்சக்தி வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவைச் சேர்ந்த (3)

உட்பிரிவின்கீழ் அரசினர் மேற்படி பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் தமிழக மின்சாரக் கழகம் யாதொரு சமயத்தில் வாங்கக்கூடிய அதிக அளவுக் கடன் ரூபாய் 40 கோடியாக இருக்கும் என்று தமிழக அரசு நிச்சயிக்கத் தீர்மானித்திருப்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகின்றேன்.

தமிழக மின்சாரக் கழகம் நல்ல பல ஆக்கப் பணிகளை ஏற்றுக் கொண்டிருப்பதை இந்த மன்றம் நன்கு உணரும். அதிகச் செலவானாலும், நமது மாநிலம் மின்சாரத் துறையைப் பெருக்கு வதிலே பெரு முயற்சி எடுத்து தொடர்ந்து பல நல்ல பணிகளை ஆற்றி வைக்கின்றது. இந்த வேலைகளுக்கெல்லாம் இந்தக் கழகம் தனக்குள்ள நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது மட்டு மல்ல; வேறுவகையிலும் கடன் திரட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பொதுச் சந்தையிலும், எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிலும் கடன் திரட்டியும் அதனுடைய ஆக்கப் பணிகளை நிறைவேற்றியிருக்கிறது. இப்பொழுது 30 கோடி ரூபாய் அளவிலே கடன் வழங்கலாம் என்ற விதி இருக்கிறது. எல்.ஐ.சி. போன்ற வேறு பல நிறுவனங்களும் இதுவரையில் வழங்கிய கடன் ரூபாய் 29 கோடியே 96 லட்சம் அளவிற்கு வந்து விட்டது. 30 கோடி ரூபாய்தான் கடன் வழங்கலாம் என்று வரையறுக்கப்பட்டது. மின்சாரக் கழகம் பல ஆக்கப் பணிகளை நிறைவேற்ற எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போதிருக்கிற அளவில் 30 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்க வசதியில்லை. ஆகவே கடன் வாங்க வேண்டிய அளவு 30 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய் என்று வரையறுக்கப்பட வேண்டும். இதனால் பல ஆக்கப் பணிகள் செய்ய முடியும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஏற்க வேண்டுமென்று இந்த அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றக் குறைந்த பட்சம் அரைமணி நேரமாவது ஆகும். இப்பொழுது 6 மணிக்கு மேல் ஆகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை எவ்வளவு நேரம் தொடர்ந்து நடக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் தலைவருடைய முடிவு இறுதியானது. நிகழ்ச்சிநிரலிலுள்ள வரிசை முறையை அதாவது முன்னால் இருப்பதை பின்னாலும், பின்னால் இருப்பதை முன்னாலும் மாற்றுவதற்கு பேரவையின் ஒப்புதல் வேண்டும். ஆனால் நேரத்தை நீடிப்பதில் தலைவருடைய முடிவே இறுதியானது. ஆகவே, இந்தத் தீர்மானம் முடிவாகின்ற வரையில் பேரவை தொடர்ந்து நடைபெற அனுமதிக்கிறேன்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, மின்சார போர்டு நல்ல ஆக்கப்பணிகளைச் செய்கிறது என்பதில் ஆட்சேபணை இல்லை. அவர்களுக்குப் பணம் தேவைப்படுகிறது. கடன் எழுப்பலாம்

அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றபோது செவ்வனே நிதியைச் செலவிட அவர்கள் ஒரு பட்ஜெட் என்று தயாரித்து இந்த அவையின் சம்மதத்தை வழக்கமாகப் பெறுவது உண்டே. அவர்களுடைய அறிக்கை இந்த மன்றத்தில் இவ்வாண்டு எப்போது உத்தேசமாக விவாதத்திற்கு வரும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எப்போதும் நமது மாநில பட்ஜெட் பிப்ரவரி, மார்ச் திங்களில் இந்த மன்றத்தில் விவாதத்திற்கு வரும். ஜூலை திங்களில் மின்சார போர்டின் பட்ஜெட் விவாதத்திற்கு வரும். ஆனால் இவ்வாண்டு நமது மாநில அரசின் பட்ஜெட்டே இந்தத் திங்களிலும், அடுத்த திங்களிலும் நடைபெற இருக்கிறது. ஆகவே மின்சார போர்டின் பட்ஜெட் அக்டோபர் திங்கள் வாக்கில் இந்த மன்றத்திற்கு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்
பி. ப. 6–12 பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. 26—6—1967 திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

201. *Notification issued with G.O. Ms. No.* 494, *Rural Development, dated the 6th March* 1967, *making an amendment to the Madras State Khadi and Village Industries Board* (*Conditions of Service of Secretary*) *Rules*, 1965. [*Laid on the Table of the House under section* 29 (3) *of the Madras Khadi and Village Industries Board Act*, 1959 (*Madras Act* 18 *of* 1959)].

65004

B. Reports, Notifications and Other Papers.

* 46. *The Madras Prohibition* (*Amendment*) *Bill*, 1967 (*L.A. Bill No.* 5 *of* 1967) *with annexure.*

* 47. *The Madras General Sales Tax* (*Amendment*) *Bill*, 1967 (*L.A. Bill No.* 6 *of* 1967).

* 48. *Report of the Select Committee of the Madras Legislature Council on the Madras District Municipalities* (*Amendment*) *Bill*, 1967 (*L.A. Bill No.* 2 *of* 1967).

* 49. *Explanatory note to Government Motion under section* (3) *of section* 65 *of the Electricity* (*Supply*) *Act*, 1948 (*Central Act LIV of* 1948).

* Despatched to Members on 23rd June 1967.